NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 22 July 2015

பெற்ற கல்வியின் வழியாக சமூகத்துக்குப் பங்காற்ற முற்படும் இளையர்களின் வெற்றிப் பயணம்

# லீ குவான் இயூ தங்க விருது பெற்ற ஜெய் கிஷன்

ஐஸ்வர்யா சுப்ரமணியன்

*படிக்கும் காலத்திலேயே சமூகத்துக்குப் பங்காற்றி, விருதுகள் பெற்ற இருவரது வெற்றிக் கதைகள்.*

பலதுறைத் தொழிற்கல்லூரிக்குப் பிறகு பல்கலைக்கழகத்தில் சேர்ந்ததால் தொடக்கத்தில் சற்றுக் கடினமாக உணர்ந்தாலும் சுயமான ஊக்குவிப்பு, விடா முயற்சி ஆகியவற்றின் மூலம் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகக் கணினித் துறையில் சிறந்த மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு லீ குவான் இயூ தங்க விருதும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார் எஸ். ஜெய் கிஷன், 26.

ஒவ்வொரு துறையிலும் சிறந்த மாணவர் ஒருவருக்கு லீ குவான் இயூ தங்க விருது வழங்கப்படும்.

பல்கலைக்கழக நாட்களில் படிப்புடன் பல சுவாரசியமான நடவடிக்கைகளிலும் அவர் பங்கேற்றுள்ளார்.

அதில் ஒன்றுதான், அவரும் அவரது நண்பர்களும் சேர்ந்து ஆரம்பித்த புதிய சமூக முயற்சி. பொது இடங்களில் வாகனங்களை நிறுத்த எங்கெல்லாம் காலியான இடங்கள் இருக்கின்றன என்பதைக் காட்டும் புதிய கைபேசிச் செயலியை உருவாக்குவதே இம் முயற்சியின் நோக்கம்.

"இன்றைய காலகட்டத்தில் முதலாளிகள் கல்வியை மட்டும் எதிர்பார்ப்பதில்லை. பலவித அனுபவங்களும் தலைமைத்துவப் பண்புகளும் முக்கியம். அனுபவங்களை விரிவுபடுத்திக்கொண்டால்தான் போட்டித்தன்மையான வாழ்க்கைச் சூழலில் தாக்குப்பிடிக்க முடியும்,'' என்று அவர் கூறினார்.

கற்பவற்றை வாழ்க்கைக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் மாற்ற, சிந்திப்பது முக்கியம் என்பதை உணர்ந்ததால் வேலையிடத்துக்கு தேவையான திறன்களை படிக்கும் காலத்திலேயே வளர்த்துக்கொண்டதாகக் கூறினார் ஜெய் கிஷன்.

கூடுதல் தகவல்களை சேகரித்தல், விரிவுரையாளர்களிடம் புரியாத பாடங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வது போன்றவற்றை மேற்கொண்டதால்தான் அவரால் தொடர்ச்சியாக 2013, 2014, 2015 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் துறையின் சிறந்த மாணவர்களின் பட்டியலில் இடம் பிடிக்க முடிந்தது.

''மனதார விரும்பி, தொடர்ந்து முயற்சி செய்தால் விரும்பியதைத் திண்ணமாகப் பெற முடியும். அவ்வப்போது சில தோல்விகளைச் சந்தித்தாலும் மனம் துவண்டு விடக்கூடாது,'' என்றார் அவர்.

"இளம் வயதில்தான் புதுப்புது விஷயங்களை முயன்று பார்க்க வேண்டும் என்று என் தாயார் ஆலோசனை கூறியது எனது ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் சிறந்த ஊக்குவிப்பாக அமைந்தது,'' என்றார் ஜெய் கிஷன்.



படங்கள் : சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்

2014ஆம் ஆண்டு 'டெக் கனெக்ட்ஸ்' போட்டியில் ஜெய் கிஷன் முதல் பரிசு பெற்றார். 2012ஆம் ஆண்டில் தகவல் மேம்பாட்டு ஆணையத்தின் சிறந்த அரசாங்கத் தகவல் பயன்பாட்டு விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழில் சபை விருதும் தேசிய இளையர் சாதனைத் தங்க விருதும் தகவல் மேம்பாட்டு ஆணையத்தின் தங்கப் பதக்கமும் இவருக்குக் கிடைத்தன.

## சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்த விழையும் மருத்துவர் சுரேந்திரன்




சிறு வயதிலிருந்தே மக்களுக்கு உதவ வேண்டும், சமூகத்துக்குச் சேவை புரிய வேண்டும் என்ற விருப்பம் இருந்ததால், மருத்துவ துறையைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறினார் சுரேந்தர். இவர் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏழு முறை கம்போடியாவுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு மருத்துவ சேவையும் வழங்கியுள்ளார். சுரேந்திரனின் சமூக உணர்வை அங்கீகரிக்கும் வண்ணம் 2014ஆம் ஆண்டு அவருக்கு 'மெட்சாக்' உன்னத விருது வழங்கப்பட்டது. பட்டம் பெற்ற மகிழ்ச்சியில் குடும்பத்தாருடன் சுரேந்திரன் (வலமிருந்து இரண்டாவது).

எட்டு வயதிலிருந்து தேசிய அளவிலான காற்பந்துப் போட்டிகளில் கலந்துகொண்டுவரும் சுரேந்திரன் படிப்பிலும் கெட்டிக்காரராக தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியில் இடம்பிடித்ததோடு துறையில் சிறந்த மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

"பல்கலைக்கழகத்தில் சிறந்த தேர்ச்சி பெற நேரத்தைச் சரியாக வகுத்துக்கொள்ளுதல் அவசியம். அவ்வப்போது தேர்வுகளில் எதிர்பார்த்த அளவுக்குச் சிறந்த தேர்ச்சி பெறவில்லை என்றாலும் மனம் தளரக்கூடாது,'' என்றார் சுரேந்திரன்.

"வாழ்க்கையைச் சுவாரசியமானதாக்க புதுப்புது அனுபவங்கள் அவசியம். மருத்துவப் படிப்பு, காற்பந்துப் பயிற்சி என்று பல கடமைகள் எனக்கு இருந்தபோதிலும் சமூக சேவைக்கு நேரம் ஒதுக்கத் தவறியதில்லை. சமூகத்துக்குத் தொண்டு செய்வதால் கிடைக்கும் மன நிறைவுக்கு அளவில்லை,'' என்று அவர் தொடர்ந்தார்.

சிண்டாவின் 'புராஜெக்ட் ஆஸ்பையர்' என்ற திட்டத்தில் பங்கேற்று தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொண்ட சுரேந்திரன், 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் சிண்டாவின் இளம் தலைவர்களுக்கான கருத்தரங்கின் ஏற்பாட்டுக் குழுவில் உறுப்பினராகவும் செயல்பட்டார்.

"இதைப்போலப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பரிச்சயமில்லாத சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், பிரச்சினைகளை எவ்வாறு சமாளிப்பது போன்றவற்றைக் கற்றுக்கொள்ளலாம். இவை நம்மைப் பண்பட்டவர்களாக மாற்றப் பெரிதும் உதவும்,'' என்றார் அவர்.

தேசியப் பல்கலைக்கழத்தில் மருத்துவ, அறுவை சிகிச்சைப் பட்டதாரியாக இவ்வாண்டு பட்டம் பெற்றுள்ள சுரேந்திரன் இப்போது டான் டோக் செங் மருத்துவமனையில் பணிபுரிகிறார்.

குடும்பத்திலியே முதல் மருத்துவராகி இருக்கும் இவர் அறுவை சிகிச்சைப் பிரிவில் நிபுணராக ஆசைப்படுகிறார்.

"எதையும் மகிழ்ச்சியுடனும் விரும்பத்துடனும் செய்ய வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாது.

"எல்லோராலும் சாதனையாளராக முடியும். அதற்கு திண்ணிய நோக்கமும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற வெறியும் இன்றியமையாதது,'' என்றார் சுரேந்திரன்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.